**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வந்தவாசி திருவண்ணாமலை மாவட்டம்</u>**

முன்னிலை - **திரு.வை.அரங்கசாமி, பி.எஸ்.சி., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர், வந்தவாசி.**

2026ஆம் ஆண்டு மே மாதம் 06 நாள் புதன் கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.193/2017</u>**

**<u>C.N.R. No. TNTM15-000995-2017</u>**

**<u>அரசுக்காக</u>:-**
காவல் ஆய்வாளர்,
கீழ்கொடுங்காலூர் காவல் நிலையம்,
குற்ற எண்.24/2015. **... குற்றமுறையிடுபவர்**

**-எதிர்-**

**1. கரிகாலன்,** ( வயது சுமார் 39/2015)
த/பெ. விஸ்வநாதன்,
கீழ்கொடுங்காலூர் கிராமம்,
வந்தவாசி வட்டம்.

**2. விஸ்வநாதன்(இறந்துவிட்டார்)**
த/பெ. சண்முகம்.

**3. அண்ணாதுரை, (வயது சுமார் 39/2015)**
த/பெ. தனபதி,
கீழ்கொடுங்காலூர் கிராமம்,
வந்தவாசி வட்டம்.

**4. பெருமாள்(இறந்துவிட்டார்)** **... எதிரிகள்**
த/பெ.ஏழுமலை.

<u>CASE SUMMARY AS PER THE CIRCULAR OF HON'BLE HIGH COURT, MADRAS</u>
IN ROC.No.814/2020/RG/F1, Dated : 07.04.2021

| | | |
|---|---|---|
| 1 | ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். | CC. No. 193/2015 |
| 2 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | **<u>அரசுக்காக</u>:-**<br>காவல் ஆய்வாளர்,<br>கீழ்கொடுங்காலூர் காவல் நிலையம்,<br>குற்ற எண்.24/2015. |

| | | |
|---|---|---|
| 3 | எதிரிகளின் பெயர், வயது, தந்தையின் பெயர் மற்றும் முகவரி | **1. கரிகாலன்,** ( வயது சுமார் 39/2015)<br>த/பெ. விஸ்வநாதன்,<br>கீழ்கொடுங்காலூர் கிராமம்,<br>வந்தவாசி வட்டம்.<br><br>**2. விஸ்வநாதன்(இறந்துவிட்டார்)**<br>த/பெ. சண்முகம்.<br>**3. அண்ணாதுரை, (வயது சுமார் 39/2015)**<br>த/பெ. தனபதி,<br>கீழ்கொடுங்காலூர் கிராமம்,<br>வந்தவாசி வட்டம்.<br>**4. பெருமாள்(இறந்துவிட்டார்)**<br>த/பெ.ஏழுமலை |
| 4 | எதிரிகளின் தொழில் | விவசாயம் |
| 5 | குற்ற நிகழ்வு நாள் | 04.02.2015 |
| 6 | புகார் அளிக்கப்பட்ட நாள் | 04.02.2015 |
| 7 | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | AB |
| 8 | எதிரிகள் ஜாமினில் விடுவிக்கப்பட்ட நாள் | 16.02.2015 |
| 9 | விசாரணை தொடங்கப்பட்ட நாள் | 13.03.2026 |
| 10 | விசாரணை முடிக்கப்பட்ட நாள் | 09.04.2026 |
| 11 | நீதிமன்றத்தின் முடிவு | **(i) எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தெளிவான சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து சந்தேகத்தின் பலனை 1ம் எதிரிக்கு எதிரான இதச பிரிவு 294(பி), 323, 324, 506(ii) -ன் கீழும், 3ம் எதிரிக்கு எதிரான இதச பிரிவு 323, 506(ii) -ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**<br><br>**(ii) இவ்வழக்கின் 2ம் எதிரி விஸ்வநாதன் என்பவரும், 4ம் எதிரி பெருமாள் என்பவரும் இறந்துவிட்டதால் அவர்கள் மீதுான குற்றம் அற்றுவிட்டது.** |

| | | |
|---|---|---|
| | | **(iii) மேலும் இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யவில்லை. அதனால் வழக்கு சொத்து குறித்து உத்தரவு எதுவும் இல்லை.** <br> **(iv) எதிரிகள் தரப்பில் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணைமுறி இவ்வழக்கின் மேல்முறையிட்டு காலத்திற்கு பிறகு இரத்தாகும் என்று உத்தரவிடப்படுகிறது.** |
| 12 | எதிரிகளுக்கு தீர்ப்பின் நகல்/ முடிவு தெரிவிக்கப்பட்டதா | ஆம் |
| 13 | காலதாமதத்திற்கான காரணம்:- | இறுதியறிக்கை - அன்று தாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் 24.08.2017 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 13.03.2026 அன்று இந்த நீதிமன்றத்தால் விசாரணை தொடங்கி, 06.05.2026 அன்று தீர்ப்பு பகரப்பட்டது. அரசு தரப்பில் எதிரிகளுக்கு அழைப்பாணையை சார்வு செய்வதிலும், சாட்சிகளுக்கு அழைப்பாணையை சார்வு செய்து முன்னிலைப்படுத்தி விசாரணை செய்வதிலும் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இந்த நீதிமன்றத்தின் தரப்பில் நியாயமற்ற தாமதம் எதுவும் இல்லை. |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் 24.08.2017ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 09.04.2026ம் தேதி இறுதி விசாரனைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை = I திரு.D.கிரகராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஆ. ரமேஷ், அவர்கள் முன்னிலையாகியுமம, இருதரப்பு வாதங்கள் கேட்டும் ஆவணங்களை ஆராயந்தும் இறுதி பரிசீலனைக்கு பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்....

<u>**தீர்ப்புரை**</u>

<u>**இறுதியறிக்கையின் சுருக்கும் :**</u>

கடந்த 04.02.2015 ம் தேதி காலை 10.15 மணிக்கு கீழ்கொடுங்காலூர் காவல் நிலைய

எல்லைக்குட்பட்ட மங்கலம் மாமண்டூர் கூட்ரோட்டிடம் வாதி திரு. பழனி என்பவரை 1ம் எதிரி கரிகாலன் என்பவர் ங்கோத்தா இதோ வரான் பாரு பாடு இவனை வெட்டினால் தான் எல்லா பிரச்சனையும் சரியாகும் என்றும், அசிங்கமாக பேசி மிரட்டி சாட்சி 1ஐ உருட்டு கட்டையால் மார்பு, காது மற்றும் கண்ணத்தில் அடித்தும், சாட்சி 2ஐ உருட்டு கட்டையால் அடித்தும், பின்னர் அவரை கீழ்கொடுங்காலூர் தேவி கருமாரியம்மன் கோயில் எதிரே இரும்பு பைப்பால் வலது தோள்பட்டை மற்றும் இடது கண்ணத்தில் அடித்தும், இறந்த 2ம் எதிரி விஸ்வநாதன் என்பவர் சாட்சி 2ஐ உருட்டு கட்டையால் முதுகு மீது அடித்தும், தேவி கருமாரியம்மன் கோயில் எதிரே சாட்சி 1ஐ உருட்டு கட்டையால் இடது காலிலும் இடது கால் முட்டியிலும் அடித்தும், 3ம் எதிரி அண்ணாமலை என்பவர் சாட்சி 1ஐ கையால் உடம்பில் மங்கலம் மாமண்டூர் கூட்ரோட்டிடம் அடித்தும், கீழ்கொடுங்காலூர் தேவி கருமாரியம்மன் கோயில் எதிரே காய்கறி கடையில் இருந்த கத்தியை எடுத்துக்கொண்டு வாங்கடா சாட்சி 1ஐ வெட்டினால்தான் பிரச்சனை தீரும் என்று மிரட்டியும், இறந்த 4ம் எதிரி பெருமாள் சாட்சி 1ஐ கையால் உடம்பு முழுவதும் மங்கலம் மாமண்டூர் கூட்ரோட்டிடம் அடித்துள்ளார்கள். எனவே, எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(ii) -ன் கீழ் தண்டிக்கத்தக்கவர்கள் என்று கீழ்கொடுங்கலூர் காவல் ஆய்வாளர் அவர்களால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றச்சாட்டு வனைதல்

இறுதி அறிக்கையின் பரிசீலினையின் பேரில் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையான போது எதிரிகளுக்கு அரசு தரப்பில் தாக்கல் ஆன ஆவணங்களின் நகல்களை கு.வி.மு.ச பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, போதிய கால அவகாசத்திற்கு பிறகு 1ம் எதிரிக்கு எதிராக இதச பிரிவு 294(பி), 323, 324, 506(ii)-ன் கீழும், 2ம் எதிரிக்கு எதிராக இதச பிரிவு 323, 324-ன் கீழும், 3ம் எதிரிக்கு எதிராக இதச பிரிவு 323, 506(ii)-ன் கீழும், 4ம் எதிரிக்கு எதிரான இதச பிரிவு 323-ன் கீழான குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு குற்றம் குறித்து வினவிய போது எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என மறுத்தார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சிகள் விசாரனைக்கு உத்திரவிடப்பட்டது.

இந்நிலையில், 1ம் எதிரி விஸ்வநாதன் கடந்த 18.02.2026ம் தேதியிலும், 4ம் எதிரி பெருமாள் என்பவர் கடந்த 02.01.2024ம் தேதியிலும் இறந்துவிட்டதாக புலன் விசாரணை அதிகாரி குறிப்பாணையுடன் இறப்புசான்றிதழ் தாக்கல் செய்துள்ளார். அதனை பரிசீலித்து உறுதி செய்தபின் 1ம் எதிரி மற்றும் 4ம் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அற்றுபோய்விட்டதாக இந்நீதிமன்றம் உத்தரவிடப்பட்டது.

## 3. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் சுருக்கம் பின்வருமாறு.

இவ்வழக்கின் அ.சா.1 திரு. பழனி, தனது சாட்சியத்தில், கீழ்கொடுங்காலூரில்

வசிப்பதாகவும், வழக்கின் எதிரிகள் தனது உறவுக்காரர்கள் என்றும், இதற்கு முன்பு தனது மனைவி ஊராட்சி மன்ற தலைவராக இருந்துவந்தார் என்றும், கடந்த 2015ம் ஆண்டு தேதி ஞாபகம் இல்லை என்றும், கீழ்கொடுங்காலூர் கூட்டுறவு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் பசுமை வீடு கட்டுவதற்கு பிடிஓ மூலம் அரசு விதி முறைகளை மீறி கட்டபட்டது தெரிந்து விசாரித்தபோது, ஒருநாள் 5 நாபர்கள் காலை 9.30 மணிக்கு என்னிடம் தகராறில் ஈடுபட்டார்கள் என்றும், அதனால் உடலில் காயம் எறுபட்டது என்றும், சம்பவத்தின்போது தனது தம்பி பெருமாள் என்பவருக்கும் காயம் எற்பட்டது என்றும், நாங்கள் வந்தவாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம் என்றும், அங்கு வந்த போலிசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றதாகவும், அந்த புகாரில் உள்ள தன்னுடைய கையெழுத்து அ.த.சா.ஆ- 1 ஆகும் என்றும், மேலும், புகாரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றும், வழக்கின் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும், வழக்கின் எதிரிகளும் நாங்களும் ஒரே ஊரைச் சார்ந்தவர்கள் என்பதால் ஊர் பெரியோர்கள் மத்தியில் சமாதானம் பேசி சமாதான மனு தாக்கல் செய்திருக்கிறேன் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் அந்த மனு அ.த.சா.ஆ. 2 ஆகும் என்றும், சாட்சியமளித்துள்ளார்.

அ.சா.3 திரு. வெங்கடேசன், தனது சாட்சியத்தில், தான் கோப்புகளின் அடிப்படையில் கூடுதல் சாட்சியம் அளிப்பதாகவும், 04.02.2015ம் தேதி வந்தவாசி அரசு மருத்துவமனையிலிருந்து வந்த தகவலின்படி சென்று அ.சா.1னிடம் புகார் வாக்குமூலம் பெற்று, சி.எஸ்.ஆர். எண். 32/2015 வழங்கி பின்பு குற்ற எண். 24/2015 இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506( ii)-ன் கீழ் புகார் அ.த.சா.ஆ. 3 பதிவு செய்தும், முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4 ஆகும் என்றும், சம்பவ சாட்சிகள் பழனி, பெருமாள், குமரேசன், தர்மன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். குமார், ராமலிங்கம் முன்னிலையில் சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகசர், மாதிரி வரைடம் தயார் செய்துள்ளார் என்றும், அவை அ.த.சா.ஆ. 5 மற்றும் அ.த.சா.ஆ.6 ஆகும் என்றும், காயம்பட்ட நபருக்கு சிசிச்சை அளித்த மருத்துவர் நாகஅர்ஜுன் அவர்களை விசாரணை செய்து விபத்து பதிவேடு பெற்று அந்த விபத்து பதிவேடு, அ.த.சா.ஆ. 7 ஆகும் என்றும், பெருமாள் என்பவருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு அ.த.சா.ஆ. 8 ஆகும் என்றும், விபத்தில் காயம்பட்டவர்களுக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று மருத்துவர் கருத்துரு வழங்கியுள்ளதாகவும், எதிரிகள் முன் ஜாமின் பெற்றுள்ளார் என்றும், பின்னர் புலன் விசாரணையை முடித்து எதிரிகள மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506( ii)-ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு,

அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இத்துடன் அரசு தரப்பு சாட்சியை முடித்துக்கொள்ளப்பட்டு எதிரிகளுக்கு எதிராக தோன்றிய அரசு தரப்பு சாட்சியை சங்கதிகளை தொகுத்து எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் வினவியபோது எதிரிகள் சாட்சியை பொய் சாட்சி என கூறி மறுத்தார்கள். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என சொன்னார்கள்.

<u>6. **தீர்வுக்குரிய பிரச்சனை :-**</u>

**இவ்வழக்கில் எதிரிகளுக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.**

7. கடந்த 04.02.2015 ம் தேதி காலை 10.15 மணிக்கு கீழ்கொடுங்காலூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மங்கலம் மாமண்டூர் கூட்ரோட்டிடம் வாதி திரு. பழனி என்பவரை 1ம் எதிரி கரிகாலன் என்பவர் ங்கோத்தா இதோ வரான் பாரு பாடு இவனை வெட்டினால் தான் எல்லா பிரச்சனையும் சரியாகும் என்றும், அசிங்கமாக பேசி மிரட்டி சாட்சி 1ஐ உருட்டு கட்டையால் மார்பு, காது மற்றும் கண்ணத்தில் அடித்தும், சாட்சி 2ஐ உருட்டு கட்டையால் அடித்தும், பின்னர் அவரை கீழ்கொடுங்காலூர் தேவி கருமாரியம்மன் கோயில் எதிரே இரும்பு பைப்பால் வலது தோள்பட்டை மற்றும் இடது கண்ணத்தில் அடித்தும், இறந்த 2ம் எதிரி விஸ்வநாதன் என்பவர் சாட்சி 2ஐ உருட்டு கட்டையால் முதுகு மீது அடித்தும், தேவி கருமாரியம்மன் கோயில் எதிரே சாட்சி 1ஐ உருட்டு கட்டையால் இடது காலிலும், இடது கால் முட்டியிலும் அடித்தும், 3ம் எதிரி அண்ணாமலை என்பவர் சாட்சி 1ஐ கையால் உடம்பில் மங்கலம் மாமண்டூர் கூட்ரோட்டிடம் அடித்தும், கீழ்கொடுங்காலூர் தேவி கருமாரியம்மன் கோயில் எதிரே காய்கறி கடையில் இருந்த கத்தியை எடுத்துக்கொண்டு வாங்கடா சாட்சி 1ஐ வெட்டினால்தான் பிரச்சனை தீரும் என்று மிரட்டியும், இறந்த 4ம் எதிரி பெருமாள் சாட்சி 1ஐ கையால் உடம்பு முழுவதும் மங்கலம் மாமண்டூர் கூட்ரோட்டிடம் அடித்துள்ளார்கள். எனவே, எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(ii) -ன் கீழ் எதிரிகள் குற்றம் புரிந்துள்ளாரகள் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

8. அரசு தரப்பு கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் வாதிடும்போது அரசு தரப்பில் வழக்கிற்கு எவரும் ஆதரவாக சாட்சியமளிக்காத நிலையில் நீதிமன்றம் தகுதியின் அடிப்படையில் வழக்கினை தீர்மானிக்க வேண்டும் என வாதிட்டார்.

9. எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும்போது அ.சா.1 புகார்தாரர் பாதிக்கப்பட்டவரே பிறழ்சாட்சியாக மாறியுள்ள நிலையில் அ.சா.3 புலன் விசாரணை

அதிகாரியின் சாட்சியம் மட்டும் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டை நிரூபிக்க போதுமானதாக இல்லை என்றும், ஆகையால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என வாதிட்டார்.

10. இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 திரு. பழனி, தனது மனைவி ஊராட்சி மன்ற தலைவராக இருந்துவந்தார் என்றும், கடந்த 2015ம் ஆண்டு கீழ்கொடுங்காலூர் கூட்டுறவு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் பசுமை வீடு கட்டுவதற்கு BDO மூலம் அரசு விதி முறைகளை மீறி கட்டபட்டது தெரிந்து விசாரித்தபோது, ஒருநாள் 5 நபர்கள் காலை 9.30 மணிக்கு என்னிடம் தகராரில் ஈடுபட்டார்கள் என்றும், அதனால் உடலில் காயம் எறுபட்டது என்றும், மேலும், புகாரில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றும், வழக்கின் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும், வழக்கின் எதிரிகளும் நாங்களும் ஒரே ஊரைச் சார்ந்தவர்கள் என்பதால் ஊர் பெரியோர்கள் மத்தியில் சமாதானம் பேசி சமாதான மனு தாக்கல் செய்திருக்கிறேன் என்றும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் அந்த சமாதானமனு அ.த.சா.ஆ. 2 ஆகும் என்றும், பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

11. பாதிக்கப்பட்ட சாட்சி அ.சா.1 திரு. பழனி, தனது சாட்சியத்தில், எதிரிகளும் தாங்களும் நீதிமன்றத்திற்கு வெளியே பெரியோர்கள் முன்னிலையில் சமாதானம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றும், அதனால் இந்த வழக்கை தான் தொடர்ந்து நடத்த விரும்பவில்லை என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

12. இவ்வழக்கில் புகார்தாரர், பாதிக்கப்பட்ட அ.சா.1 அரசு தரப்பிற்கு ஆதரவாகவோ, அல்லது எதிரிகளுக்கு எதிராகவோ சாட்சியம் அளிக்கவில்லை. பிறழ்சாட்சியாக மாறியுள்ளார். இந்நிலையில், மற்ற சாட்சிகளை விசாரிப்பதற்கான அவசிய சூழ்நிலை ஏற்படவில்லை என்றும், மனுவின் பேரில் அரசு தரப்பில் முன் வைக்கப்பட்ட கோரிக்கையை இந்நீதிமன்றம் ஏற்று மற்ற பட்டியல் சாட்சிகளை விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை.

13. மேற்படி விளக்கப்பட்டதற்கிணங்க மனுவின்பேரில் கூடுதல் சாட்சியாக கீழ்கொடுங்காலூர் காவல்நிலையத்தின் ஆய்வாளர் திரு. வெங்கடேசன், சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்கள் அ.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அ.சா.3ன் மூலமாக அ.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ. 8 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.3 காவல்துறை சாட்சியாக இருப்பதனாலும், அ.சா.3ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகளை தண்டிப்பது என்பது இயற்கை நீதிக்கு முரணானதாகும். அ.சா.3 சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி அல்ல, மேலும், அ.சா.3 சாட்சியம் அ.சா.1-ன் சாட்சியத்துடன் முரண்பட்டு காணப்பட்டுள்ளது. அ.சா.1 பிறழ்சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக அமைந்துள்ளது. இதச

சட்டப் பிரிவு 294(பி), 323, 324, 506(2)-ன் கீழ் குற்றங்களுக்கு உண்டான உட்கூறுகள் எதுவும் நிறைவேறியிருப்பதாக அரசு தரப்பில் போதுமான சாட்சியங்களை முன்னிலைப்படுத்தவில்லை.

14. எதிரிகள் மீது சாட்டப்படும் ஒவ்வொரு குற்றச்சாட்டுகளும் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட வேண்டியது அரசு தரப்பின் பொறுப்பாகும். இவ்வழக்கில் எதிரிகள் மீதான குற்றங்கள் சந்தேகத்திற்கிடமில்லாமல் நிரூபிக்கப்படவில்லை. எனவே, எதிரிகள் சந்தேகத்தின் பலனை பெற தகுதியுடையவராகிறார்கள். எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(ii)-ன் படியான குற்றங்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,**

**(i) எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தெளிவான சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி, 1ம் எதிரிக்கு எதிரான இதச பிரிவு 294(பி), 323, 324, 506(ii) -ன் கீழும், 3ம் எதிரிக்கு எதிரான இதச பிரிவு 323, 506(ii) -ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

**(ii) இவ்வழக்கின் 2ம் எதிரி விஸ்வநாதன் என்பவரும், 4ம் எதிரி பெருமாள் என்பவரும் இறந்துவிட்டதால் அவர்கள் மீதுான குற்றம் அற்றுவிட்டது.**

**(iii) மேலும் இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யவில்லை. அதனால் வழக்கு சொத்து குறித்து உத்தரவு எதுவும் இல்லை.**

**(iv) எதிரிகள் தரப்பில் எழுதிக்கொடுக்கப்பட்ட பிணைமுறி இவ்வழக்கின் மேல்முறையிட்டு காலத்திற்கு பிறகு இரத்தாகும் என்று உத்தரவிடப்படுகிறது.**

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு பின்னர் இன்று 2026ம் ஆண்டு மே திங்கள் 06ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ARANGASAMY VAIYAPURI

Digitally signed by ARANGASAMY VAIYAPURI
Date: 2026.05.06 06:39:30 +0530

**நீதித்துறை நடுவர்,**

**வந்தவாசி.**

**<u>அரசுத் தரப்பு சாட்சிகள்</u>**

அ.த.சா.1 திரு. பழனி - புகார்தாரர்
அ.த.சா.2 திரு. பெருமாள்
அ.த.சா.3 திரு. வெங்கடேசன் (சிறப்பு உதவி ஆய்வாளர், கீழ்கொடுங்காலூர் காவல் நிலையம்

**<u>அரசுத் தரப்பு சான்றாவணங்கள்</u>**

அ.த.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1ன் கையொப்பம்
அ.த.சா.ஆ.2 சமாதான மனு
அ.த.சா.ஆ.3 புகார் வாக்குமூலம்
அ.த.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை
அ.த.சா.ஆ.5 பார்வை மகசர்
அ.த.சா.ஆ.6 மாதிரி வரைபடம்
அ.த.சா.ஆ.7 அ.சா.1-ன் விபத்து பதிவேடு
அ.த.சா.ஆ.8அ.சா.2-ன் விபத்து பதிவேடு

**<u>அரசுத் தரப்பு சான்று பொருட்கள்</u>**
சா.பொ. இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சியம்</u>** - இல்லை
**<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள்</u> -** இல்லை

ARANGASAMY VAIYAPURI

Digitally signed by ARANGASAMY VAIYAPURI
Date: 2026.05.06 06:39:43 +0530

**நீதித்துறை நடுவர்,**
**வந்தவாசி.**

**<u>குறிப்பு.</u>**

1. எந்த சாட்சியும் 3 கேட்பு தினங்களுக்கு மேல் விசாரணை செய்யாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கின் முடிவு குறித்து காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.